

நவீன உலகின் இணையற்ற கண்டுபிடிப்பு கணினி ஆகும். இதை கணினி, கணிப்பொறி என்று பல பெயர்களால் அழைப்பர். இது ஒரு மின்னியல் கருவியாகும். கணினி ஆரம்பக் காலங்களில் கணிப்புத் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது. இன்று கணினி பல்வேறு தேவை களுக்கும் பயன்படுகின்றது. இன்று கணினியில் பல்வேறு மாற்றங்கள் வந்து விட்டன. இடத்துக்கு இடம் கொண்டு செல்லக்கூடிய மிகச் சிறிய கணினிகளும் வந்துள்ளன. எதிர்காலத்தில் கணினியின் துணை இல்லாமல் மனிதன் வாழ முடியாத நிலை ஏற்படலாம்.

கணினி தற்காலத்தில் மருத்துவம், நூலகம், தகவல் தொடர்பு, வானியல் ஆய்வு போன்ற பல்வேறு துறைகளிலும் பயன்படுகின்றது.

குறிப்பு: ★ கணினியின் பயன்பாடு தொடர்பான நேரடி அனுபவங்கள் பெறச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும்.